[1981] பிப்ரவரி 4

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, பாதிப்பு ஏற்படுமா ஏற்படாதா என்பதைப்பற்றி நிபுணர்களே கருத்து வேறுபாடு கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதைப்பற்றி நன்றாகப் பரிசீலித்து முடிவெடுக்கும்.

திரு. து. புருஷோத்தமன்: தலைவரவர்களே, இந்த அபூர்வ மான குரங்கினம் இந்தத் திட்டத்தால் அழிந்துவிடுமா என்பதைக் கண்டறிய சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்து, அதை அங்கே அனுப்பி அந்த இனம் அழியாமல் இருப் பதற்கு ஆலோசனை கூறும்படி செய்வதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றிக் குறைவாகச் சொல் வதாகத் தயவு செய்து கருதக் கூடாது. நம்மைக் கண்டு அந் தக் குரங்குகள் ஓடி விடக் கூடாது.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இந்த மணி முத்தாறு நீர்மின் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்து விட்டதா? அல்லது இன்னும் அனுமதி கொடுக்கவில்லையா? அதேபோல, தமிழ்நாட்டிலுள்ள எந்தெந்த நீர் மின் திட்டங்க ளுக்கு மத்திய அரசு அனுமதியில்லாமல் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது திட்டக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது, திட்டக் குழுவின் பரிசீலனையில் சுமார் பத்து திட்டங்கள் இருக்கின்றன அதைப்பற்றி மின்வாரிய நிதிநிலை அறிக்கை விவாதத்தின் பொழுதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

*வினா எண். 163— திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் ஒன்று நிறுவ அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

1981 பிப்ரவரி 4]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மேல் தாமிரபரணி நீர்மின்திட்டத்திற்கு ஆய்வு செய்யப்பட்ட அடிப்படையில் எஸ்டிமேட் எவ்வளவு ஆகிறது? ஆய்வு சீக்கிரமாக முடிக்கப்பட்டு, வேலையும் சீக்கிரமாகத் துவங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டமும் அதே பகுதியிலேதான் வருகிறது. ஆகையினால் அந்தக் கேள்வியிலே கேட்ட துணைக் கேள்விகளுக்கு அளித்த பதில்கள் இதற்கும் பொருந்தும். இந்த மேல் தாம்பிரபரணி நீர்மின் திட்டம் 165 மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடியது; 87.47 கோடி ரூபாய் செலவாகும். இதுவும் திட்டக் கமிஷனின் பரிசீலனையில் இருக்கிறது ?

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்விக்குக் கேட்ட துணைக் கேள்விகளுக்கான பதில் இதற்கும் பொருந்தும் என்று அமைச்சர் சொல்லிவிட்ட பிறகு மேலும் துணைக் கேள்விகளுக்கு இடமில்லை. அந்தக் கேள்விக்கு நிறைய துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டு விட்டன. அதற்கே துணைக் கேள்விகள் கேட்டு பதில் சொல்லிக் கொண்டிருந்தால் சபையின் நேரம் வீணாகும்.

[முற்பகல் 9.20]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : அவர்கள் சொன்னது வேறு. நான் சொன்னது வேறு, (குறுக்கீடுகள்) இந்த மேற்குத் தாம்பிரபரணி நீர் மின் திட்டம் என்ற பகுதியிலே அந்தக் குரங்கு சரணாலயம் என்பதைப் பற்றி அறிவிக்கவும் இல்லை; அந்தப் பகுதி அதிலே வரவும் இல்லை. ஆகவே, அந்தக் கேள்வி இந்த உப கேள்விக்குப் பொருந்தாது. ஆகவே, அதை அனுதாபத்தோடு பரிசீலனை செய்வதோடு மட்டுமல்லாது, மின் தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்திலே—தற்போது 30 சதவீதம் வெட்டு இருக்கிறது. ஆகவே, அந்த மின் வெட்டைத் தவிர்க்கின்ற வகையிலே, அத் திட்டத்தை அனுதாபத்துடன் பரிசீலித்து, நிறைவேற்றி, மின் வெட்டைத் தவிர்க்க அரசாங்கம் சீக்கிரமாக நடவடிக்கை எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, களக்காடு மற்றும் முண்டந்துறை வனவிலங்கு சரணாலயத்திலுள்ள வட்டாரங்களில் எந்தவித ஆய்வுப் பணியும் மேற்கொள்ளக் கூடாதெனவும், மேலும் இவ்வட்டாரங்களில் எதிர்

காலத்தில் எந்தவிதத் திட்டமும் நிறுவுவது முடியாத காரிய மெனவும் வனத்துறை கருத்து தெரிவித்துள்ளது. எனவே, முண்டந்துறை வனவிலங்கு சரணாலயமுள்ள இடத்தில் எந்த விதமான ஆய்வுப் பணியும் மேற் கொள்ளக் கூடாதெனவும் மேற்படி இடத்தில் நிறுவக் கருதியுள்ள மேல் தாமிரபரணித் திட்டத்தை மீண்டும் பரிசீலிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 164: 165, 166, 167 ஆகியவை மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

கூட்டுறவு பழம் பதனிடும் தொழிலகம், வேலூர்.

வினா எண். 168—திரு இல. பலராமன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம் வேலூர் கூட்டுறவுப் பழம் பதனிடும் தொழிலகம் தனியாருக்கு வாடைகைக்கு விடப்பட்டதா?

(ஆ) எந்த அடிப்படையில் வாடகைக்கு விடப்பட்டது?

(இ) இதன் வருடாந்திர வாடகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகள் எழவில்லை.

திருப்பூரில் சப் கோர்ட் அமைத்தல்.

வினா எண் 169— திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :

திருப்பூர் நகரில் சப்–கோர்ட் அமைக்கும் திட்டம் எந்த அளவில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : திருப்பூர் நகரில் சார்பு நீதிமன்றம் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.